
ஆப்பிரிக்க நாடுகள் வரிசை 10

# நடு ஆப்பிரிக்கா



'சோமலெ'

ஆப்பிரிக்க நாடுகள் வரிசை—10

# நடு ஆப்பிரிக்கா

'சோமலெ'

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.


முதற்பதிப்பு—நவம்பர் 1968
உரிமை ஆசிரியர்க்கு.

விலை 75 காசு

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நடு ஆப்பிரிக்கா | ... | 5 |
| ஜாம்பியா | ... | 7 |
| ரொடீசியா | ... | 24 |
| சில விவரங்கள் | ... | 25 |
| மலாவி | ... | 35 |
| போர்த்துக்கீசிய ஆட்சியிலுள்ள ஆப்பிரிக்க நாடுகள் | ... | 42 |
| அங்கோலா | ... | 46 |
| மொசாம்பிக்கே | ... | 50 |
| வரலாற்றுக் குறிப்புகள் | ... | 54 |



ஜாம்பியாவின் தலைநகர்-ஒரு தோற்றம்

# நடு ஆப்பிரிக்கா

## (ஜாம்பியாவும் அண்டை நாடுகளும்)

இந்நூலில் வடரொடீசியா, தென் ரொடீசியா, நியாசாலந்து, அங்கோலா மொசாம்பிக்கே, ஆகிய நாடுகளைக் காண்போம்.

தென் ரொடீசியா என்ற நாடு இப்போது ரொடீசியா என்று தன் பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறது. வட ரொடீசியா, ஜாம்பியா என்ற புதுப் பெயரைப் புனைந்து கொண்டிருக்கிறது. நியாசாலந்து மலாவி என்ற பெயரில் இப்போது விளங்கி வருகிறது. இம்மூன்று நாடுகளும் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தவை.

பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் பெரும் முயற்சியால் போர்த்துக்கல் நாடு தன்வயப்பத்திக் கொண்ட பெரிய பகுதிகள் அங்கோலாவும் மொசாம்பிக்கேயும். இவை உலகத்தின் கண்களில் பெரிதும் படுகின்றன,

இந்த ஐந்து நாடுகளும் ஆப்பிரிக்காவின் தென் பகுதியிலும் தென் ஆப்பிரிக்க ஐக்கியம் என்ற நாட்டுக்கு வடக்கேயும் உள்ளன. இவற்றை நடு ஆப்பிரிக்கா என்று குறிப்பது வழக்கமாயிருந்து வருகிறது. ஆனால் இவை ஆப்பிரிக்கப் பெருநிலப்பரப்பின் நடுப்பகுதியில் இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்.




ஜாம்பியா அரசின் சின்னம்

# ஜாம்பியா

மின்சாரம், இன்றைய வாழ்வில் இன்றியமையாத பொருளாக இருக்கிறது. ஒளி தருவது மின்சாரம்; ஒலியைக் கேட்க வைப்பது மின்சாரம்; காற்றை வழங்குவது மின்சாரம்; சமைக்கத் துணை செய்வது மின் சாரம்; சவரம் செய்து கொள்ளவும் மின்சார உதவி யால் இயலும்.

இவ்வாறு பலவகையாக உதவும் மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்ருெரு இடத்திற்குப் பாய்ச்சு வதற்குச் செப்புக் கம்பிகள் தேவைப்படுகின்றன.

*　　　　*　　　　*

செம்பு என்பது செந்நிறமான ஒரு புவியியல் பொருள். தாமிரம் என்ற பெயராலும் இது வழங்கப் பெறுகிறது.

சுரங்கங்களிலிருந்து இதை வெட்டி எடுக்கிருர்கள். இதனுடைய உறுதியை அறிந்த நம் முன்னோர் இறை உருவங்களைத் தாமிரத்தில் செய்தார்கள். குறிப்பாக உலாவரும் இறையுருவங்கள் (உற்சவ விக்கிரகங்கள்) செய்ய இது பயன்படுத்தப்பட்டது.

பாத்திரங்கள் செய்யவும் தாமிரம் ஏற்றது. கப்பல்கள், கடல் நீரால் பழுது அடைவதைத் தடுக்க செப்பைத் தகடாக்கிக் கப்பல்களுக்குப் பொருத்து கிருர்கள்.

நாணயங்கள் செய்யவும் செப்பு, பெரிதும் பயன் படுகிறது.

*　　　　*　　　　*

பிற பொருள்களுடன் சேர்ந்தும் செப்பு, பயன், படுகிறது.

துத்தநாகத்தைச் சேர்த்தால் செப்பு, பித்தளை ஆகிவிடுகிறது.

தகரத்தைச் சேர்த்தால் செப்பு, வெண்கலம் ஆகி விடுகிறது.

செப்பும் நிக்கலும் சேர்ந்தால் ஜெர்மன் சில்வர் கிடைக்கிறது.

* * *

இயேசுநாதர் காலத்திலேயே செப்பு பயன்படுத்த பட்டதாக மேலை நாட்டவர் குறிப்புக்களிலிருந்து தெரிகிறது. ஆனால் அந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் முன்னரே, நீண்டநெடுங்காலமாகத் தமிழரும் இந்தியா வில் உள்ள ஏனைய மக்களும் செப்பைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். இது மோகஞ்சதாரோவில் அகழ்ந்து எடுக்கப்பட்ட பொருள்களினின்று தெரிகிறது நெல்லை மாவட்டத்து ஆதிச்ச நல்லூரில் புதை பொருள் ஆராய்ச்சியிலும் செப்பால் செய்யப்பட்ட சிறு கருவிகள் அகப்பட்டுள்ளன.

* * *

உலகிலேயே செப்புப்படிவங்கள் நிறைந்திருக்கும் நாடுகள் சிலி, ஜாம்பியா இரண்டுமே. இந்தச் சுரங் கங்கள் ஜாம்பியாவில் கண்டு பிடிக்கப்பட்டதே ஒரு கதை.

1902ஆம் ஆண்டில் கோலியர் என்ற ஒருவெள்ளைக் காரன் வேட்டையாடச் சென்றான். அவன் ஒரு மிருகத்தைச் சுட்டு விழ்த்திய இடம் செப்புப்படிவம்

நிறைந்திருந்தது. அந்த இடத்தில் தான், முதலாவதாக ஒரு செப்புச் சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

1910ஆம் ஆண்டில், செப்புப் படிவம் இருப்பது இந்நாட்டின் பல பகுதிகளிலும் தெரியத் தொடங்கிற்று.

1920ல் இக்கனிப் பொருளை வெட்டியெடுக்கும் முயற்சி பெரிய அளவில் மேற் கொள்ளப்பட்டது.

காடுகளை வெட்டினார்கள்; கனியை எடுக்கும் இயந்திரங்களை வரவழைத்தார்கள்; வெடி வைக்கும் இயந்திரங்களைக் கொண்டு சுரங்கத்தைத் தோண்டினார்கள். 200அடி ஆழத்துக்குக் கீழே துளைக் கருவிகளைப் பொருத்தினார்கள். புவியியல் ஆராய்ச்சி நிபுணர்களின் உதவியுடன் சோதனைகள் செய்யப்பட்டன. பாறைகளை வெடி வைத்துப் பிளக்க மின்சாரம் பயன்பட்டது. புதிய சுரங்கங்களைக் கண்டு பிடிக்க எலிக்காப்டர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. தாமிரச் சுரங்கங்கள் உள்ள பகுதிக்கு, ஆப்பிரிக்கத் தாமிர வளையம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு சுரங்கப் பகுதியருகேயும், அலுவலகக் கட்டடங்கள் அழகாக அமைக்கப்பெற்றன. அலுவலர் வீடுகளும் தொழிலாளர் குடியிருப்புக்களும் கடைகளும் மருத்துவ மனைகளும் கட்டப்பெற்றன. சுரங்கங்களுக்குள் பள்ளங்களில் பூமிக்கடியில் குடைந்தெடுத்து 900 மைலுக்கு ஓடைகள் உருவாக்கப்பெற்றன.

1930 அளவில் உலகப் பொருளாதார நிலையில் ஒரு மந்தம் ஏற்பட்டது. தாமிரத்தின் விலையும் வீழ்ச்சியடைந்தது. அதனால் சில சுரங்கங்கள் மூடப்பட்டன.

1933ல் நிலைமை மாறிற்று. புதிதாகப் பெரிய சுரங்கங்கள் தோண்டப் பெற்றன. ஆங்கிலேயரும்

அமெரிக்கரும் கோடிக்கணக்கில் முதல் போட்டனர் இப்போது முஃபுலிரா சுரங்கம், சிபுலுமா சுரங்கம்' சாம்பிஷி சுரங்கம் ஆகியவையும் என்ஷங்கா சுரங்கம், எங்காஞு சுரங்கம், பாங்கிராஃபட் சுரங்கம் ஆகியவையும் ஜாம்பியாவின் தாமிரச் சுரங்கங்களுள் மிகப் பெரியவை. முதல் மூன்றும் ரொடீசியன் ஸெலக்ஷன் டிரஸ்டு குரூப் ஆவ் கம்பெனீஸ் என்ற நிறுவனத்தாலும் அடுத்த மூன்றும் ஆங்கிலோ-அமெரிக்கன் குரூப் என்ற நிறுவனத்தாலும் நடத்தப்பெறுகின்றன.

1955 வரை சுரங்கங்களில் கிடைத்த கனிச்செல்வம், சுத்தமில்லாத நிலையில், கச்சாச் செப்பாக வெட்டியெடுக்கப்பட்டது. பிறகு, கரிபா நீர்மின் விசை நிலையத்திலிருந்தும் சுரங்கப் பகுதிகளிலுள்ள மின் விசை நிலையங்களிலிருந்தும், தாமிரச் சுரங்கங்கள், ஆண்டுதோறும் 200 கோடி டன் கிலோவாட் மின் சாரத்தைப் பயன்படுத்தி வருகின்றன. மின்சாரக் கருவிகளால், கனிக் கட்டிகளைப் பொடியாக்கி உருக்கி, தாமிரத்தைப் பிரித்துக் கம்பிப்பாளங்களாக்கி ஏற்றுமதி செய்கிறார்கள்.

தொழிற்சாலைகளுக்கும், எலக்டிரானிக் கருவிகளில் பயன்படுத்துவதற்கும் தேவையான பக்குவங்களிலும் அளவுகளிலும், தாமிரத்தைச் சுரங்க நிறுவனங்கள் வழங்குகின்றன.

இந்த நாட்டின் ஏற்றுமதியில் 100க்கு 90 விழுக்காடு தாமிரம் ஆகும். ஆண்டுதோறும் பத்து லட்சம் டன் வரை உற்பத்தி செய்ய இயலும். ஜாம்பியாவில் எழுபது கோடி டன் தாமிரம் இருப்பதாகப் புவியியல் அறிஞர் கருதுகின்றனர்.

தாமிரச் சுரங்கத் தொழிலால் ஐந்து லட்சம் மக்கள் வாழ்கின்றனர். அவர்களுடைய செல்வநிலை உயர்ந்திருக்கிறது. இந்த நாட்டிற்கு வெளிநாடு களிலிருந்து ஆண்டுதோறும் 260 கோடி ரூபாய் கிடைக்கிறது.

யானை பிளிறுவதும் சிங்கம் முழங்குவதும் எருமை கத்துவதும் தான் இந்தக் காடுகளில் பல தலைமுறை களாக மக்கள் கேட்டு வந்த குரல்கள். இந்தக் குரல்கள் மாறி, தொழிற்சாலைகளின் ஒலிகள் கேட்கத் தொடங்கின; பாம்பாடும் இடங்கள் பந்தாடும் இடங் களாயின. திருப்பதியில் வாழும் மக்களில் பெரும் பகுதியினர் கோயிலை நம்பி வாழ்வது போல, ஜாம்பியா மக்களில் பெரும் பகுதியினர் செப்புச் சுரங்கங்களையும், ஏனையோர் புகையிலை பயிரிடுவதாலும் அரசாங்க வேலைகளாலும் வாழுகின்றனர்.

மேலும், ஜாம்பியாவின் தாமிரச் செல்வத்தால் அந்த அரசின் வரவு செலவுத் திட்டம் பெருஞ்செலவுக் குப் பின்னரும் நிறைந்த கையிருப்புள்ள திட்டமாக இருந்து வருகிறது. பற்றுக்குறை என்ற பேச்சே அங்கே கிடையாது.

தாமிரச் செல்வத்தால் இரயில் பாதை போடப் பட்டிருக்கிறது. விமான நிலையங்கள் தோன்றியுள்ளன' புதிய நகரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கிறித்தவ சமயம் பரவி இருக்கிறது. சுரங்கத் தொழிலை யொட்டி குடியேறி ஐரோப்பியர் நாரத்தைப் பழச் செடியையும் புகையிலையையும் தொழில் முறையில் பயிரிடலாயினர்.

ஜாம்பியாவின் கொடியிலும் அந்த நாட்டு அரசின் சின்னத்திலும் சுரங்கத் தொழில் இடம் பெற்றி ருக்கிறது.

* * *

ஜாம்பியாவின் அமைப்பு, காலையும் கையையும் கட்டிக்கொண்டு ஒருவன் அரைகுறையாகச் சாய்ந்து இருப்பவன் போலத் தோற்றம் தருகிறது.

வடக்கே காங்கோவின் ஒரு பகுதி ஜாம்பியாவுக்குள் துருத்திக் கொண்டிருக்கிறது. வடகிழக்கு மூலையில் டான்ஜேனியாவைச் சேர்ந்த தங்கனிகாவும் கிழக்கே மலாவியும் தென்கிழக்கிலும் தெற்கிலும் ரொடீசியாவும் தெற்கில் மொசாம்பிக்கேயும் தென் மேற்கே பெச்சுவானலந்தும் மேற்கே அங்கோலாவும் இந்த நாட்டைச் சூழ்ந்துள்ளன.

இந்த நாட்டின் பெரும்பகுதி கடல் மட்டத்திலிருந்து 3,500 அடிக்கும் 4,500 அடிக்கும் இடைப்பட்ட உயரத்தில் இருக்கிறது. வேனிற் காலத்தில் வெப்பம் சற்றுக் கடுமையாகவே இருக்கிறது.

**வரலாறு**

ஜாம்பியா பழமையான நாடு. இயேசு காலத்திற்குப் பல்லாயிரம் ஆண்டு முன்னரே இங்கே மக்கள் வாழ்ந்தனர் என்பது தொல்பொருள் ஆராய்ச்சியால் தெரிகிறது. அக்காலத்தினர் கல்லாலும் மரத்தாலும் செய்த கருவிகளும் கிடைத்திருக்கின்றன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன், சுற்றியுள்ள ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து மக்கள் இங்கே குடியேறி, பயிர்த் தொழில் செய்தனர் என்பதற்குச் சான்றுகள் அகப்பட்டிருக்கின்றன. லுகாசாவுக்கு 70 மைல் தெற்கே, 1964—ல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து கி. மு. 850 அளவில் இங்குப் பருத்தி பயிரிடப்பட்டதாகவும் நெசவுத் தொழில் சிறந்திருந்ததாகவும் தெரிகிறது.

வட ஆப்பிரிக்காவிலிருந்து தென் ஆப்பிரிக்கப் பகுதிகளுக்குச் செல்வதற்குரிய வழியாக ஜாம்பியா இருந்து வந்திருக்கிறது. இதனுல் அவ்வப்போது வலுவாக இருந்தவர்கள் இப்பகுதியைத் தாக்கி வந்திருக்கின்றனர். இவ்வாறு இங்கு வந்த பண்டு இனத்தவரின் வழிவந்த சில ஆயிரம்பேர் இன்றும் ஜாம்பியாவில் உள்ளனர். ஜாம்பியாவில் உள்ள ஆப்பிரிக்கரின் தொல் மரபு இனங்கள் 73 ஆகும். இவ்வினத்தார் அனைவரும் பல படையெடுப்புக்களின் போது குடியேறியவர்களே. இவர்கள் செப்பும் மொழிகளின் எண்ணிக்கை முப்பது. அவற்றுள் குறிப்பிடத் தக்க மொழிகள் ஏழு மட்டுமே.

**ஐரோப்பியர் தொடர்பு**

*1798*—ல் நம் நாட்டுக்கு வாஸ்கோட காமா வந்த ஆண்டில் ஒரு போர்த்துக்கீசியர் அங்கோலாவுக்கும் அதன் அண்டை நாடான ஜாம்பியாவுக்கும் வந்தார். அவரைத் தொடர்ந்து, போர்த்துக்கீசிய வணிகர் பலர் ஜாம்பியாவுக்கு வந்தனர்.

1850 அளவில் டேவிட் லிவிங்ஸ்டன் என்ற ஆங்கிலேயர் ஜம்பேசி ஆற்றுப் பகுதியையும் விக்டோரியா அருவிப் பகுதியையும் விரிவாக ஆராயத் தொடங்கிஞர். அவர், 20 ஆண்டுகளுக்கு மேல் இப்பணியிலேயே ஈடுபட்டு இப்பகுதியைப் பற்றி அறிவுலகம் அறியச் செய்தார்.

லிவிங்ஸ்டனுடைய அறிக்கைகள் ஐரோப்பிய நாடுகளில் வாழ்பவர்கள் கண்ணைத் திறந்துவிட்டன. பொருள் சேர்க்கும் ஆசையையும் மதம் மாற்றும் ஆர்வத்தையும் அவர்களிடையே தூண்டிவிட்டன. செசில்

ரோட்ஸ் நிறுவிய பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்கக் கம்பெனியின் ஆட்சிக்குள் வடகிழக்கு ரொட்டீசியா விலும் வடமேற்கு ரொடீசியாவிலும் 1891இல் தனித் தனி நிர்வாகங்கள் ஏற்பட்டன. 1899இல் இந்த நிர்வாகங்கள் பிரிட்டிஷ் அரசின் கண்காணிக்கைக்கு உட்பட்டன. 1911இல் வடரொடீசியா என்ற பெயரில் ஆட்சி ஏற்பட்டது. வடகிழக்கு, வடமேற்கு ஆட்சிகள் இணைக்கப்பெற்றன.

1924இல் பிரிட்டிஷ் அரசினர் ஒரு கவர்னரை நிய மித்தனர். சட்டமன்றமும் ஆட்சிக் குழுவும் நியமிக் கப்பட்டன. இப்பகுதியைத் தென் ரொடீசியாவுடன் இணைக்க வேண்டுமென்ற திட்டத்தை ஜாம்பியா மக்கள் எதிர்த்த வண்ணமாக இருந்தனர்.

வடரொடீசியாவும் நியாசாலந்தும் பிரிட்டிஷ் பாதுகாப்பு நாடுகளாகவும் தென் ரொடீசியா, உள் ளாட்சி உரிமை படைத்த பிரிட்டிஷ் குடியாட்சியாக வும் இருந்து வந்தன. இந்த மூன்று அமைப்புக்களை யும் ஒன்று சேர்த்து 1953இல் **ரொடீசியா நியாசாலந்து கூட்டாட்சி** தோற்றுவிக்கப்பெற்றது.

கூட்டாட்சி வடக்கிலிருந்து தெற்கே ஓராயிரம் மைலுக்குப் பரவியிருந்தது. ஒருகோடி மக்களைத் தன் னகத்தே கொண்டிருந்தது. மூன்று பகுதிகளிலும் ஒன்றுக்கொன்று ஆதரவாகப் பொருளாதாரக் கட்டுக் கோப்புக்களையும் போக்குவரத்து வசதிகளையும் பெருக் கிக் கொள்வது இந்தக் கூட்டாட்சியின் குறிக்கோளாக இருந்தது.

1959இல் கென்னத்கௌண்டா தலைமையில் ஜாம்பியா காங்கிரசு என்ற விடுதலை இயக்கம் ஆப்பி

ரிக்க மக்கள் ஆதரவுடன் ஜாம்பியா நாடெங்கும் பரவியது. திரைப்பட மாளிகைகளிலும் உணவு விடுதிகளிலும் கறுப்பர் என்பதற்காக யாரையும் தடை செய்யக்கூடாதென்று சட்டம் வகுக்கப்பட்டது. இவ்வாறு சட்டம் செய்வதற்கு வடரொடீசிய அரசுக்கு உரிமை இல்லை என்று தென் ரொடீசிய அரசு தெரிவித்தது. இந்த முடிவு வட ரொடீசியாவில் உள்ள வெள்ளையரைத் தூண்டிவிடுவதாக இருந்தது.

ரொடீசியா நியாசாலந்து கூட்டாட்சியில் ஆப்பிரிக்கர் 95% இருந்ததை வெள்ளையர் விரும்பவில்லை. அதனுல் தங்களுக்கு ஆபத்து ஏற்படுமென்று தென் ரொடீசியாவிலுள்ள வெள்ளையர்கள் நினைத்தார்கள். தென் ரொடீசியாவைப் பிற இரு பகுதிகளிலிருந்து பிரித்து வைத்துத்தான் ஆப்பிரிக்கக் கறுப்பர் செல்வாக்கு என்ற வெள்ளத்துக்கு அணைபோட வேண்டுமென்று தென் ஆப்பிரிக்கா கருதியது.

ரொடீசியா நியாசாலந்து கூட்டாட்சியில் நிற உணர்ச்சி வலுத்தது. வெள்ளையருக்கு இருந்து வந்த தனிச்சலுகைகளே கிளர்ச்சிக்கு வித்தாகஇருந்தன.

1964 ஆம் ஆண்டில் மலாவி என்ற பெயரில் நியாசாலந்தும் சில திங்கள்களுக்குப் பிறகு ஜாம்பியா என்ற பெயரில் வட ரொடீசியாவும், இந்த ஐக்கியத்திலிருந்து பிரிந்தன. அவை சுதந்திர நாடுகளாயின.

தென் ரொடீசியா தன் பெயரை ரொடீசியா என மாற்றிக்கொண்டது. இந்தியாவில் கிழக்குப் பஞ்சாப் மாநிலத்தின் பெயர் பஞ்சாப் என்று மாற்றப் பெற்றதை நினைவு கூர்ந்துகொள்ளலாம்.

**ஜாம்பியா : பெயர்க் காரணம்**

ரொடீசியா என்பது பொதுப்பெயர். ஆப்பிரிக்காவின் தென் பகுதியில் பிரிட்டிஷ் செல்வாக்கைப் பரப்பியும் சுரங்கங்களைத் தோண்டியும் வணிக நிலையங்களை அமைத்தும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு 19ஆம் நூற்றாண்டில் அடித்தளம் அமைத்தவர், செசில்ரோட்ஸ் என்ற ஆங்கிலேயர் ஆவர். அவர் பெயரால் அந்தப் பகுதிகள் வழங்கலாயின.

சுதந்திரம் பெற்ற ஆப்பிரிக்கர் இடையே வந்த ஆங்கிலேயரான ரோட்ஸ் பெயரை அகற்றி ஐம்பேசி என்னும் ஆற்றின் பெயரால் தங்கள் நாட்டுக்கு ஜாம்பியா என்ற பெயரை இட்டுக்கொண்டனர்.

**ஐம்பேசி**

இது இந் நாட்டின் பெரிய ஆறு. இந்த ஆறு பல இடங்களில் காங்கோ நாட்டுக்கும் ஜாம்பியா நாட்டுக்கும் எல்லையாகவும் ரொடீசியாவுக்கும் ஜாம்பியாவுக்கும் எல்லையாகவும் இருக்கிறது. இந்த ஆறு பாட்ஸ்வானு, அங்கோலா, மொசோம்பிக்கே ஆகிய நாடுகளையும் தொட்டுச் செல்கிறது.

ஐம்பேசி ஆப்பிரிக்காவின் பெரிய ஆறுகளுள் ஒன்று. சிலஇடங்களில் இதன் அகலம்ஒன்றேகால் மைல். நான்கு லட்சம் சதுரமைல் பரப்பளவுக்கு இது பயன் தருகிறது.

பல வகைகளில் இந்த ஆறு காவேரி ஆற்றை நினைவுபடுத்துகிறது. ஆனால் இது காவேரியைவிடப் பலமடங்கு பெரியது. காவேரியின் துணை ஆறுகளாக அமராவதி ஆறும், பவானி ஆறும் இருப்பதைப்போல கபுயே, லுவாங்வா என்ற ஆறுகள் ஐம்பேசியுடன் கலந்து அதை வளப்படுத்துகின்றன. ஐம்பேசிக்கு

வடக்கே முப்பெரும் ஏரிகள் உள்ளன. இவற்றின் பரப்பு 4,000 சதுரமைல் (ஏறத்தாழ, தஞ்சை மாவட்டத்தின் அளவு) ஆகும். இந்த ஆற்றுக்குத் தெற்கே கரிபாவில் மிகப் பெரியதொரு ஏரியை வெட்டி அங்கு மின்சார நிலையம் நிறுவப்பெற்றிருக்கிறது. இந்த நிலையம் மேட்டூர் மின்சார நிலையத்தினும் பெரியது. ஐங்பேசி ஆற்று நீரைப் பயன்படுத்த மற்றும் ஒரு மின்சார நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நிலையங்களும் கட்டுவதற்கு உலக வங்கி உதவியுள்ளது.

கரிபா ஏரியில் நீச்சடிக்கவும், படகோட்டவும், வேனிற்காலத்தில் பொழுதுபோக்கவும் வசதி உண்டு. கப்பல் ஏறி, இவ்வேரிகள் வழியாகத் தங்கனிகா, டான்ஜேனியா நாடுகளுக்கும் செல்லலாம்.

**அருவிகள்**

ஜாம்பியா—ரொடீசியா எல்லையில் இந்த ஆற்று நீர் 350 அடி உயரத்திலிருந்து விழுகிறது. விக்டோரியா அருவி என்பது இதன் பெயர். அருவி நீர் விழுந்து பயன்படும் பரப்பில் விக்டோரியா ஏரிதான் உலகிலேயே பெரியது என்று சொல்லுகிறார்கள். விக்டோரியா அருவி என்பது ஆங்கிலேயர் வைத்த பெயர் ஆகும். ஆப்பிரிக்கர் இதை முசிஉவாடுன்யா என்று குறிப்பிடுகின்றனர். இடிமுழக்கத் துடன் கூடிய தண்ணீர் என்பது இச்சொற்றொடரின் பொருள். இதைவிட உயரமான ஏரிகளும் ஜாம்பியாவில் உள்ளன. கலம்போ அருவியின் உயரம் 726 அடி. மைசூர் மாநிலத்திலுள்ள மகாத்மா காந்தி அருவியின் உயரம் 800 அடி.

திருக்குற்றுல அருவிக்குச் செல்வதற்கு வாயிலாக தென்காசி நகரம் இருக்கிறதல்லவா? இதுபோல விக்டோரியா அருவிக்குச் செல்ல வாயிலாக விளங்கு வது லிவிங்ஸ்டன் என்னும் சிறு நகரம். தென்காசி யைச் சுற்றிலும் வளமான நிலங்களும் அருகேயுள்ள செங்கோட்டை வட்டத்தில் அடர்த்தியான காடுகளும் யானைகளும் மரஅறுவை ஆலைகளும் உள்ளன. விக் டோரியா அருவிப்பகுதியிலும் இதே காட்சிகளைத்தான் காண இயலும். வாங்கி கபுவே என்ற இரு இடங்களில் பலவகையான உயிரினங்கள் பெரிய அளவில் உள்ளன. இவற்றை வேட்டையாடக் கூடாது. உயிர்க் காட்சிக் கூடங்களாக இந்தக் காடுகள் அரசினரின் மேற்பார்வை யில் தேசியப் பூங்காக்களாக இயங்கி வருகின்றன. கபுவே தேசியப் பூங்காவின் பரப்பு சேலம், தருமபுரி ஆகிய இருமாவட்டங்களும் சேர்ந்த பரப்பின் அள வாகும். இந்தப் பூங்காக்களை காண வருபவர்களை ஈர்க்கும் உயிரினங்கள் எருமை, பலவகை முதலைகள், யானை, சிங்கம், நீர்க்கோழி, உருவில் மிகப் பெரிய யானைகள், ஒட்டகைச் சிவிங்கிகள், பாலூட்டும் கறுப்பு மான்கள் என்பன.

லிவிங்ஸ்டன் நகரில், ரோட்ஸ் மியூசியம் என்ற பொருட்காட்சிக் கூடம் இருக்கிறது. இதில் கற்காலம் முதல் மனிதனின் வரலாற்றை எடுத்துரைக்கும் பல் வேறு பொருள்கள் விளக்கக் குறிப்புகளுடன் வரிசை யாக வைக்கப் பெற்றுள்ளன. சில ஆயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட கல் மண்டபங்கள் பெயர்த்துக் கொண்டு வந்து இங்கு வைக்கப் பெற்றிருக்கின்றன. இவற்றிலுள்ள சுவரோவியங்களைப் பார்த்தால் ஒரு வரும் ஆப்பிரிக்காவை இருண்ட கண்டமென்று சொல்லமாட்டார்கள்.

**ஆப்பிரிக்கர்**

ஜாம்பியாவாழ் ஆப்பிரிக்கர் ஏராளமான மொழிகளைப் பேசுகின்றனர். பொது மொழியாகப் போலீசாரும் படையினரும் நியான்ஸா என்ற மொழியைப் பேசுகின்றனர். சில சுரங்கங்களில் சட்டம்போ என்ற மொழி, பொது மொழியாய் நிலவுகிறது.

ஜாம்பியா வாழ்ப் பெண்கள் கறுப்புச் சிவப்பு ஆடைகளையே விரும்பி அணிகின்றனர்.

இங்குள்ள மக்களின் தலையாய தொழில் வேளாண்மையும் கால்நடை வளர்த்தலும் ஆவன. விர்ஜினியா, பர்லி, துருக்கி ஆகிய மூவகைப் புகையிலைகளைப் பயிரிடுகின்றனர். சாப்பாட்டுக்குச் சோளத்தைப் பெரிய அளவில் பயிரிட்டுக் கொள்கிறார்கள். பருத்திச் சாகுபடியின் அளவு ஆண்டுதோறும் கூடுதலாக வருகிறது. பால் கறக்கவும் மாட்டிறைச்சிக்குப் பயன்படவும் ஏற்ற மாடுகளை அவர்கள் வளர்க்கிறார்கள்.

ஏரிகளில் மீன் பிடிப்பது பெரிய அளவில் பரவி வருகிறது. இரயில்பாதைகள் போடுவதற்கு உதவும் மரக்கட்டைகள் ஜாம்பியாக் காடுகளில் வளரும் ஒரு செந்நிறமான மரத்திலிருந்து வெட்டப்படுகின்றன.

இசையில் இவர்களுக்கு நிறைந்த ஆர்வம் உண்டு. மயானங்களில் பல மரங்களை வளர்க்கிறார்கள். பிணத்தைப் புதைக்கும்போது ஒருவகை நடனக் கச்சேரியை நடத்துவது மரபாக இருந்து வருகிறது.

**பல்சுவை**

ஜாம்பியாவில் இருப்பவை: எழுபது கோடி டன் செப்பு, தேவையைவிடக் கூடுதலான நீர்வளம், பரப்பளவாலும் உயரத்தாலும் உலகிற் சிறந்த அருவிகள்,

இல்லாதது : கடல், ஓராண்டில் ஏழு மாதத்திற்கு மழை.

சிறப்பான தொழிற்சாலைகள் : சர்க்கரை, மணிலா எண்ணெய், மரப்பொருள்கள், உரம், சிமிண்டு, துணி, செருப்பு, பெயிண்டு, பிளாஸ்டிக் பொருள்கள் ஆகியவற்றைச் செய்யும்தொழிற்சாலைகள் உள்ளன. எஃகுப் பொருள்கள் சிலவற்றைச் செய்யும் தொழிற்சாலைகளும் மோட்டார்காரின் உருப்புகளை இணைக்கும் தொழிற்சாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

உற்பத்தியாகும் உணவுப் பொருள்கள் : சோளம், மணிலாக் கடலை, புகையிலை, நெல், துவரை, பழங்கள்.

புவியியல் பொருள்கள் : ஈயம், துத்தநாகம், கோபால்ட்.

மலிந்தது : மீன்

பெரிய பிரச்சினை : மக்களிடையே நுரையீரல்நோய், பெரிய அம்மை, மலேரியா, கண் நோய் போன்றவை பரவியுள்ளன. லவ்பாலா பள்ளத்தாக்கில் வாழும் மக்களில் 40 பேருக்கு ஒருவர் குருடராக உள்ளனர். காம்போவா என்ற இடத்தில் குருடர் பள்ளியில் குருடரே ஓராயிரம் ஏக்கரில் வேளாண்மை செய்கின்றனர். இப்பண்ணையில் பயிற்சி பெற்ற பிறகு தனித் தனியே ஐந்து ஏக்கர்ப் பரப்புள்ள சொந்தப் பண்ணைகளை நடத்தும் தகுதியை அவர்கள் பெற்றுவிடுகின்றனர்.

"டுசெட்சே" என்பது ஒருவகைப் பூச்சி. இது கால்நடைகளைக் கொல்லுகிறது. இந்தப் பூச்சி கடித்தால் ஆடுமாடுகளும் குதிரைகளும் சாகின்றன. இந்தப் பூச்சியால் மனிதர்கள் சில நாட்களுக்குச் சேர்ந்தாற்

போல் தூங்கிவிடுகின்றனர். இராமாயணப் பாத்திரமாகிய கும்பகர்ணனையும் ஒருவேளை இந்தப் பூச்சிதான் கடித்ததோ என்னவோ?

இந்தப் பூச்சியைப் போக்க எவ்வளவோ முயற்சிகள் செய்யப்படுகின்றன. மருந்துகள் தெளிக்கப்படுகின்றன. அவ்வாறு செய்யும்போது இந்தப் பூச்சி மரங்களில் போய் ஒண்டிக்கொள்கிறது. அதற்காக அந்த மரங்களை வெட்டுகிறார்கள். பிறகு அவை அடுத்த மரங்களின் நிழலில் போய் ஒண்டிக்கொள்ளுகின்றன.

கால்நடைகள் இந்த நாட்டின் சில பகுதிகளிலிருந்து வேறு சில பகுதிகளுக்குச் செல்லுவதற்குப் பாஸ்போர்ட் வழங்கப் பெற்றிருக்கிறது. பூச்சி நீக்கப்கப்பட்ட பகுதிக்குள் நோய் இல்லாத கால்நடைகளை மட்டுமே ஓட்டிச் செல்லலாம். பூச்சி பற்றிய ஆராய்ச்சிக்கும் நோய்த் தடுப்புக்கும் ஜாம்பியா அரசும் ரொடீசியா அரசும் மூன்று கோடி ரூபாய் செலவிட்டிருக்கின்றனராம், கும்பகோணத்தில் கொசுவும் சென்னையில் மூட்டைப் பூச்சியும் ஜாம்பியாவில் டுசெட்சே பூச்சியும் ஒழியும் நாள் எந்நாளோ?

**வெளிநாட்டு உறவு**

ஜாம்பியாவிற்குக் கடற்கரை இல்லாததாலும் (தென்) ரொடீசியாவுடன் அரசியல் நெருக்கடி பல ஆண்டுகளாக இருந்து வருவதாலும் டான்ஜேனியா வழியாகத்தான் வெளிநாடுகளுக்குத் தாமிரத்தை அனுப்ப வேண்டியிருக்கிறது. இதற்கு வசதியாகத் தாமிரத்தைச் சுரங்கப் பகுதிகளிலிருந்து டார் எஸ் சலாம் துறைமுகத்திற்கு அனுப்ப இரயில்பாதை போடப்பட்டிருக்கிறது.

அரசியலிலும் பொருளாதாரத்திலும் கம்யூனிச சார்புடைய கொள்கைகளை டான்ஜேனியா வலியுறுத்தி வருகிறது. அந்த நாட்டுடன் நெருங்கிய உறவு கொண்டால் ஜாம்பியாவுக்குக் கேடு ஏற்படுமோ என்று சிலர் அஞ்சுகின்றனர். வெளிநாட்டு மூலதனமும் வேளாண்மையில் முன்னேற்றமும் மேம்பாடடைந்துள்ள போக்குவரத்து முறைகளும் கென்னத் காவுண்டாவின் ஒப்பற்ற தலைமையின்கீழ் இருப்பதால் அண்டையிலுள்ள வெள்ளை நாடுகளைப்பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை. அண்டை நாடுகளில் ஆங்கிலேயர், போர்த்துக்கீசியர் ஆகியோரின் செல்வாக்குக் குறையக் குறைய ஜாம்பியாவின் செல்வாக்கு மிகுதியாகும்.

## பரோட்சிலந்து

இது மூன்று லட்சம் மக்கள் உள்ள சதுப்பு நிலப் பகுதி. பிரிட்டிஷ் பேரரசுக்கு உட்பட்டு ஆப்பிரிக்கத் தலைவன் ஒருவனின் தனியாட்சி இங்கு நெடுங்காலம் நடந்தது. இது ஜாம்பியா நாட்டுக்குள் ஒரு தீவுபோல அதன் மேற்குப் பகுதியில்இருக்கிறது,



தாமிரச் சுரங்கத்தில் ஒரு காட்சி

# ரொடீசியா

1960ஆம் ஆண்டு முதல், செய்திகளில் அடிக்கடி ரொடீசியா இடம் பெறுகிறது. ஏன் இந்த நிலை என்பதை முதலில் அறிந்து கொள்வோம்.

ஆப்பிரிக்காவிலேயே இன்று இருவகை அரசுகள் உள்ளன. ஒரு பக்கம் வெள்ளையருக்கே ஏற்றம் தரும் நாடுகள்; மற்றொரு பக்கம் மக்கள் ஆட்சி நிலவி செல்வாக்குள்ள ஆப்பிரிக்கத் தலைவர்களின் தலைமையில் சுதந்திரமாக இயங்கி வரும் நாடுகள்.

முதல் வகையில் தென் ஆப்பிரிக்காவும், மொசாம்பிக்கேயும் அங்கோலாவும் உள்ளன. இந்த நாடுகளில் 100-க்கு 15 பங்குள்ள ஐரோப்பியரிடம் 100-க்கு 85 பங்குள்ள ஆப்பிரிக்கரின் குடுமி இருக்கிறது. அஞ்சல் நிலையங்கள் வெள்ளையருக்கு மட்டும் தனிப்பகுதிகளில் உள்ளன. பூங்காக்களிலும் நீந்தி விளையாடுவதற்குரிய குளங்களிலும் இவ்வாறு நிறவேறுபாடு விளங்குகிறது.

தொலைபேசியில் பேசுவதற்கும் ஐரோப்பியர்க்கும் ஆப்பிரிக்கஆசியர்க்கும் தனிக்கருவிகள் பொருத்தப்பட்டுள. மின் தூக்கிகளும் (லிப்ட்) இவ்வாறே தனித்தனியாக உள்ளன. நம் நாட்டில், இன்னும்கூடச் சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் குடிக்கத் தனிக் குவளைகள் இல்லையா? அப்படித்தான் இவையும்.

# ஜாம்பியா முதலிய நாடுகள் : சில விவரங்கள்

| | (வட ரொடீசியா) ஜாம்பியா | (தென் ரொடீசியா) ரொடீசியா | நியாசாலந்து மலாவி | மொசாம் பிக்கே | அங்கோலா |
|---|---|---|---|---|---|
| பரப்பளவு (சதுர மைல்) | 2,90,500 | 1,50,333 | 45,747 (இதில் ஏரி களின் பரப்பு, 9,966) | 2,97,654 | 4,81,352 |
| மக்கள் தொகை | 38 லட்சம் | 48 லட்சம் | 34 லட்சம் | 63 லட்சம் | 50 லட்சம் |
| ஆப்பிரிக்கர் அல்லாதார் | ஒரு லட்சம் | மூன்றுலட்சம் | 50,000 | 3 லட்சம் | 10 லட்சம் |
| தலைநகர் | லுசாகா | சாலிஸ்பரி | சோம்பா | லாரன்சோ மார்க்குவேஸ் | லாவுண்டா |
| சுதந்திரம் பெற்ற நாள் | 24-10-1964 | நவம்பர் 1965 | ஜூலை 1964 | | |
| இந்தியர் பாகிஸ்தானியர் | 10,000 | 8,000 | 12,000 | | |
| ஆட்சி மொழி | ஆங்கிலம் சுவாகிலி | ஆங்கிலம் | ஆங்கிலம் | போர்த்துக்கிய மொழி (ஆங்கிலம்) | போர்த்துக்கிய மொழி |
| ஏற்றுமதி | தாமிரம், பிற கனிச் செல்வங்கள் | புகையிலை | தேயிலை | பருத்தி, சர்க்கரை | காப்பி, வயிரம் |

ARCHIVES

கீழ்க்கண்ட அறிவிப்புக்களும் சில இடங்களில் விளம்பரப் படுத்தப்பட்டுள:

## அபாயம்

இரவில் உள்ளே நுழைந்தால்,
துப்பாக்கியேந்திய வீரர்
உங்களைச் சுட்டு வீழ்த்துவர்.
உங்கள் பிணத்தை தின்பதற்கு,
நாய்கள் காத்திருக்கின்றன.
**உங்களை எச்சரித்து விட்டோம்.**

தங்களுடைய தேவைக்கு மேற்பட்ட போர்ப் படைகளையும் இந்த நாடுகள் வைத்திருக்கின்றன. பெரியஆகாய விமானப் படைகளும் அவர்களிடம் உள்ளன.

பொருளாதாரத் துறையில் முன்னேறியிருக்கின்ற மேற்கண்ட நாடுகளிடம் சுதந்திர ஆப்பிரிக்க நாடுகள் அரசியல் துறையில் போட்டி போடுகின்றன. இந்த ஓயாத போராட்டம் ரொடீசியாவிலேயே நடைபெறுகிறது. ரொடீசியாவிற்குத் தெற்கிலும் கிழக்கிலும் வடமேற்கிலும் மேற்கண்ட வெள்ளைக்கார நாடுகளும் வடக்கே ஜாம்பியா, மலாவி, காங்கோ, கீன்யா. உகண்டா, டான்ஜேனியா ஆகிய நாடுகளும் உள்ளன.

உலக நாடுகளின் வெறுப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமல் ரொடீசியா 1965ல் ஒருதலையாகத் தன்னை சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டது. தென் ஆப்பிரிக்காவுடன் சேர்ந்துகொண்டு உலகை மிரட்டி வருகிறது.

அந்தப் பிரகடனத்தைப் பிரிட்டன் ஏற்கவில்லை.

'ஒரு ஆளுக்கு ஒரு வாக்கு' என்ற அடிப்படையில் ஒவ்வொரு ஆப்பிரிக்கருக்கும் ரொடீசிய ஆட்சியில் வாய்ப்பு வழங்கி மக்களாட்சி நிறுவுவதானால்தான், ரொடீசியாவின் சுதந்திரத்தைப் பிரிட்டன் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று ஐ. நா. அவையின் பொது மன்றம் 1968 அக்டோபர் இறுதியில் முடிவு செய் திருக்கிறது.

*　　　*　　　*

உலகத்தையே மிரட்ட இந்தச் சின்னஞ்சிறு நாட் டிற்கு எப்படித் துணிவு ஏற்பட்டது?

அந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு 17 பேரையும் எடுத்துக் கொண்டால் 16 பேர் கறுப்பராகவும் ஒருவர் வெள்ளைக் காரராகவும் இருக்கிறார்கள்.

சொத்தும் கல்வியறிவும் உடைய ஆப்பிரிக்கருக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப் பெற்றிருக்கிறது. தவிரவும், கடந்த 10 ஆண்டுகளில் வெள்ளையர் குடி யேற்றம் விரைந்து நடைபெற்றிருக்கிறது. இதனால் இப்போது வெள்ளையரின் விழுக்காடு கூடுதலாக உள்ளது.

ரொடீசியா, ஆப்பிரிக்காவிலேயே அழகான நாடு களில் ஒன்றாகத் திகழ்கிறது.

சாலிஸ்பரி, புலவாயே, திவேலோ, உம்டாலி என்னும் நகரங்களில் கட்டிடங்கள் விண்ணை நோக்கி உயர்ந்து கொண்டே போகின்றன.

பல பொருள்களில் இந்த நாடு தன்னிறைவு கொண்டிருக்கிறது. புகையிலை உற்பத்தி இந்த நாட்டின் பெருஞ் செல்வமாகும். ரொடீசியத் தலைநகரான

சாலிஸ்பரியில் தான், உலகிலேயே பெரிய அளவில் புகையிலை ஏலம் போடப்படுகிறது.

சோளம் பெரிய அளவில் உற்பத்தியாகிறது. பருத்தி, தேயிலை, காப்பியும் இவ்வாறே.

ஐக்கிய நாடுகள் அவை பொருளாதாரத் தடைகளை எவ்வளவோ விதித்தும்கூட, அதனால் ரொடீசியா பாதிக்கப்படவே இல்லை. அடுத்த சில மாதங்களில் ரொடீசியாவின் பொருளாதாரம் சரிந்துவிடும் என்று அரசியல் நோக்கர்கள் அடிக்கடி ஆருடம் கூறி வருகிறார்கள். சில கடைகளில் இன்று ரொக்கம் நாளை கடன் என்று எழுதிப் போட்டிருப்பார்கள். மறுநாளும் அதே அறிவிப்புக் காணப்படும். இப்படித்தான் இருக்கிறது ரொடீசியாவின் பொருளாதார நிலை அடுத்த சில மாதங்களில் ஆட்டங்கண்டு விடும் என்று சொல்வதும்.

புகையிலைக்கு அடுத்தபடி ரொடீசியாவுக்குத் தங்கச் சுரங்கங்கள் வழியாக வருவாய் கிடைக்கிறது. அஸ்பெஸ்டாஸ் உற்பத்தியில் உலகிலேயே மூன்றாவது நாடு ரொடீசியா. உலகிலேயே பெரிய அளவிலும் குறைந்த செலவிலும் ரொடீசியாவில்தான் குரோமைட் தோண்டப்படுகிறது. நிலக்கரி, பிளாட்டினம், நிக்கல், இரும்புத் தாது, லித்தியம் ஆகியவையும் இங்கே கிடைக்கின்றன. செம்பும் சிறிதளவு உண்டு. ரொடீசியாவில் இவ்வளவு கனிச் செல்வங்கள் இருப்பதால், இங்கிலாந்தை இந்தியரிடமும் ஆப்பிரிக்கரிடமும் ஒப்புவித்துவிட்டு, ஆங்கிலேயர் அனைவரும் தென் ஆப்பிரிக்காவுக்கும் ரொடீசியாவுக்கும் குடியேறிவிட்டால் ஒன்றும் வியப்படைவதற்கில்லை. ஏன் எனில், அதுதான் படிப்படியாக நடைபெற்று வருகிறது. பிரிட்டனில் மக்கள் நெருக்கம் மிகுந்துவிட்டது; வாழ்க்கைத் தரம் குறைந்து வருகிறது. ரொடீசியா, பிரிட்டனைப்போல

மூன்று பங்கு பரப்புடையது: இன்னும் மக்கள் குடியேற இடமும் இயற்கை வளமும் இருக்கின்றன.

**சாலிஸ்பரி**

ரொடீசியாவின் தலைநகரம், சாலிஸ்பரி. இது நடு ஆப்பிரிக்கக் கூட்டாட்சியின் தலைநகராக 1964 வரை இருந்து வந்தது.

இந்நகர் 4,500 அடி உயரத்தில் இருக்கிறது. நான்கு லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இவர்களுள் முக்கால்வாசிப் பேர் ஐரோப்பியரே. எப்போது பார்த்தாலும் புதிய வடிவத்தோடும் பொலிவோடும் காட்சி தருகிறது. ரொடீசியப் புகையிலைச் செல்வத்திற்கும் வேறுபல தொழில் நிறுவனங்களுக்கும் இது தலைநகராக இருக்கிறது. தூய்மைக்கும் சுகாதாரத்துக்கும் சான்றாக மிளிரும் இந்த அழகான நகரத்தில் வாழ்பவர்கள் ஒரு சில மணிநேரம், கூட சேரிகள் நிறைந்த சென்னையில் வாழ விரும்பமாட்டார்கள்.

உலக நாடுகளின் எதிர்ப்பைச் சமாளித்து ரொடீசியா முன்னேறி வருவதற்கு ஒரு காரணம் அந்த நாட்டின் ஆட்சி, இளைஞர் கையில் இருப்பதாகும்.

**ஆப்பிரிக்கர் நிலை**

ரொடீசியாவில் ஆப்பிரிக்கர் பெரும்பான்மையாக இருப்பதால் அவர்களிடமே ஆட்சியை ஒப்படைக்க ரொடீசிய வெள்ளையரைப் பிரிட்டிஷ் அரசு கட்டுப்படுத்தும் என்றும் அதற்காகப் பிரிட்டனிலிருந்து படைகள் அனுப்பப்படும் என்றும் ஆப்பிரிக்கர் பயித்தியக்காரத்தனமாக நினைத்தார்கள். அந்த

நம்பிக்கையில் ஏமாற்றம் அடைந்தார்கள். தக்கவாறு வழிகாட்ட, ஆற்றலும் பொறுப்பும் உடைய தலைவர் கிடைக்கவில்லை. ஆப்பிரிக்க நாடுகள் அனுதாபம் தெரிவித்தன. மாநாடுகளை நடத்தின. அதன் பின்னர் அவர்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை.

பெரு நகரங்களுக்கப்பால் ஆப்பிரிக்கர்க்கு என்று தனி நகர அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. கூட்டாட்சியில் ஆப்பிரிக்கருக்கு இருந்த உரிமைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. ஐரோப்பியருக்கு வேலை செய்யும் ஆப்பிரிக்கர் மட்டும், ஐரோப்பிய நகரங்களில் வாழ்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களுடைய குழந்தைகளைப் படிக்கவைப்பதற்கோ படித்தபின் அவர்களை வேலையில் சேர்க்கவோ ஆப்பிரிக்கர் வாழும் நகரங்களுக்குத்தான் அவர்களை அனுப்ப வேண்டும். ஐரோப்பிய நகரங்களில் வாழும் ஆப்பிரிக்கர்களுக்கு வாக்குரிமையே கிடையாது.

மேற்கத்திய நாகரித்தையும் செல்வாக்கையும் கிறித்தவ சமயத்தையும் நிலைநாட்டுவதற்குத் தோன்றியவர்களாக ரொடீசிய வெள்ளைக்காரர் தங்களை நினைக்கிறார்கள். இந்தக் கருத்தை ஏற்காத அனைவரையும் அவர்கள் கம்யூனிஸ்டு என்று நினைக்கிறார்கள்.

ரொடீசியாவில் நிற உணர்ச்சியின் விளைவாக, இரயில் ஓட்டியவரும், இரயில் இயந்திரத் தொழிற்சாலையில் வேலை பார்த்த தொழிலாளரும், ஓடும் இரயிலில் உணவு படைப்பவர்களும் ஆகிய ஆப்பிரிக்கர்கள் வேலையைவிட்டு நீக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்குப் பதிலாக, இந்த வேலைகளில் சிறிதள

வும் பயிற்சி பெருத கிரேக்கரும் இத்தாலிரும் வரவழைக்கப்பட்டு வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். வேலை தெரியாவிட்டால் என்ன? தோலின் நிறம் வெள்ளையாக இருந்தால் போதுமே!

சுரங்கங்களில் ஆப்பிரிக்கருக்குத் தொழிற் கல்வி புகட்டுவது கிடையாது. ரொடீசியா, வெள்ளையர் நலனுக்காகப் படைக்கப்பட்ட நாடு என்று வெள்ளையர் நினைக்கிருர்கள்.

'கறுப்பர் எங்கும் வாழ்ந்துவிடுவர், எப்படியும் வாழ்ந்துவிடுவர். அவர்களுடைய தேவை குறைவு. அவர்களுடன் வாழ்க்கைப் போட்டியில் நாங்கள் போட்டிபோட இயலுமா!' என்று வெள்ளையர் கேட்கிருர்கள். இதில் ஒரு சிறு உண்மை இருக்கிறது. உலகத்திலேயே மக்கட் பெருக்கம் சீனுவிலும் இந்தியாவிலும் நிகழ்கிறது. இவற்றிலும் கூடுதலாக, ரொடீசிய ஆப்பிரிக்கர் குழந்தைகளை உற்பத்தி செய்கிருர்கள். ஒவ்வொரு இருபது ஆண்டுகளிலும் அவர்களுடைய தொகை இருமடங்கு ஆகிறது. 1968ல் அவர்கள் தொகை 45 லட்சம். கி. பி. 2000ல் ரொடீசிய கறுப்பர் ஒரு கோடியையிடக் கூடுதலாக இருப்பார்கள். அவர்களுக்கு எங்கிருந்து சோறு போடுவது? எப்படி வீடு கட்டிக் கொடுப்பது? யார் அவர்களுக்கு வேலை தேடி வழங்குவது? படிக்கவைக்க வழியுண்டா? மருத்துவமனைகளில்தான் இடம் இருக்குமா? ஆகையால், ரொடீசியாவிலேயே ஒரு பகுதியை ஆப்பிரிக்கருக்கு விட்டுக்கொடுத்து, 'நீங்கள் ஆயிற்று; உங்கள் பகுதியாயிற்று. எங்களை ஆளை விடுங்கள்; வாழவிடுங்கள்' என்று சொல்லிவிடலாம் என்று வெள்ளையர் சிலர் நினைக்கின்றனர்.

கல்வியறிவுடைய ஆப்பிரிக்கர் மிகச் சிலரே. அவர்கள் பயிலும் பள்ளிகளின் தரமும் இரண்டாம் தரமாகவே இருக்கும். வெள்ளையர் பயிலும் பள்ளிகள் அளவிலும் அமைப்பிலும் வசதியிலும் அரண்மனைகள் போலிருக்கும்.

செய்தித்தாள்கள் யாவும் சில வெள்ளைக்கார நிறுவனங்கள் கையில் உள்ளன. அவர்களே, ஒரு புனை பெயரில் ஆப்பிரிக்கர் கருத்துப்போல ஆசிரியர்க்கு ஒரு கடிதம் எழுதி வெளியிட்டு, மறுநாள் அக் கருத்துக்கு ஒரு மறுப்பும் அரசினரின் விளக்கமும் பிரசுரிப்பர்.

தொழில்களுக்கு அரசினர் சில சலுகைகளும் காப்பு வரிகளும் பாதுகாப்பும் கொடுத்துவருகின்றனர். எனவே, ரொடீசியாவில் செயற்கையாகத்தான் மக்களின் (வெள்ளையரின்) வாழ்க்கைநிலை பெருமை யாக விளங்கி வருகிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். 1960ல் கூட்டாட்சியில் (வட) ரொடீசியாவில் திறக்கப் பட்ட கரிபா மின்நிலையம், கூட்டாட்சியின் பெரிய சாதனை என்று விளம்பரப்படுத்தப்பட்டாலும் முத லீட்டுக்கு ஏற்ப அதில் வருவாய் வரவில்லை என்றும், முதலீட்டுக்காக வாங்கிய கடன்களைத் திரும்பக் கொடுக்க இயலவில்லை என்றும் வீணுகப் பெரிய விளம் பரம் பெற்றதுதான் கண்ட பலன் என்றும் ஜாம்பியா வைப்பற்றி ரொடீசியர் குறை கூறுகிறார்கள்.

ஒரு தலைப் பட்சமாக, சுதந்திரம் அறிவித்தபிறகு ரொடீசியாவும் பிரிட்டனும் இரு வேறு உலகங்களாக உள்ளன. பிரிட்டிஷ் அரசினர், தங்களுக்கு என்றும் போல உரிமை இருப்பதாயும் ரொடீசியா சுதந்திர நாடு அன்று என்றும் கூறிவருகின்றனர்.

சில குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட ஆப்பிரிக்கர், பிரிவி கவுன்சிலுக்கு ‘அப்பீல்’ செய்துகொண்டனர். அதன் பிறகு, அவர்கள் தூக்குத் தண்டனை ஆணையை மாற்றிவிடும்படி பிரிட்டிஷ் அரசியை வேண்டினர். அரசியார் பிரிட்டிஷ் தலைமையமைச்சரின் பரிந்துரைக்கு ஏற்ப, 1968 மார்ச்சு மாதத்தில் ஆப்பிரிக்கர் சிலர்க்கு விதிக்கப்பெற்ற தூக்குத் தண்டனையை நிறுத்திவைத்து அவர்கள்பால் கருணை காட்டி ஆணை பிறப்பித்தார்.

ரொடீசிய அரசினர் இந்த ஆணையை மீறி, உடனே அந்த ஆப்பிரிக்கர்களையும் மேலும் 120 பேரையும் ஈவு இரக்கமின்றித் தூக்கில் போட்டனர். பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்வதும், அரசியார் கருணை காட்டுவதும், சுதந்திர ரொடீசியாவின் உரிமையைப் பறிப்பதாகும் என்று அவர்கள் முழங்கினர்.

‘இந்த நாட்டின் குடிமகன் ஒருவனின் உரிமையை உயிரைப் பாதுகாக்கச் சட்டப்படி இயலாதெனின், நீதி வழங்குவதற்கு ஒன்றுமில்லை. எனவே, நான் என் வேலையைவிட்டே விலகுகிறேன்’ என்று ரொடீசிய வெள்ளை நீதிபதி ஒருவர் விலகிக்கொண்டார். இவரது விலகல் செய்தித்தாள்களில் வெளிவரவில்லை. தணிக்கை முறையை எதிர்க்கும் முறையில், உரிய இடத்தைச் செய்தித்தாள்கள் காலி இடமாக விட்டு, இதழ்களை வெளியிட்டன.

கறுப்பர் தூக்குப்போடப்பட்டதற்கு இந்தியப் பாராளுமன்றம் 7—3—68ல் வருத்தம் தெரிவித்தது. ரொடீசிய அரசின் செயலைத் தலைமை அமைச்சர் இந்திராகாந்தி வன்மையாகக் கண்டித்தார். சில ஆண்டுகளுக்குமுன் தாம் சாலிஸ்பரி வழியாகச்

சென்றதாகவும், சாலிஸ்பரி விமான நிலேயத்தில் தன்னைச் சந்திக்க விரும்பிய ஆப்பிரிக்கத் தலைவர்களை ரொடீசிய அரசு கைது செய்ததாயும் இந்திராகாந்தி குறிப்பிட்டார்.

ஆப்பிரிக்கர் தூக்குப் போடப்பட்டதை யடுத்து, உள்நாட்டுப் பகுதிகளில் கலகங்கள் மூண்டன. கலகத்தை அடக்க, தென் ஆப்பிரிக்க அரசு ரொடீசியாவுக்கு துருப்புக்களை அனுப்பியது. இத்தகைய நிலைமைகளைச் சமாளிக்க ரொடீசியப் படையினர்க்குப் பயிற்சி வழங்கப்பெற்றது.

தூக்குத் தண்டனையை நிறைவேற்றிய செய்தியை அறிந்ததும், ஐக்கிய நாடுகள் அவையினர் கொதித்தனர். உடனடியாக ரொடீசியாவுடன் எல்லா நாடுகளும் வணிக உறவுகளை அறுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தனர். இதன் விளைவாக (1) ரொடீசிய அரசு, சர்க்கரை உற்பத்தியைக் குறைத்துக் கொண்டது. அதனுல் ஏற்படும் நஷ்டங்களுக்கு சர்க்கரை ஆலைகளுக்கு ஈடு கொடுக்க முன்வந்தது. (2) புகையிலையின் விலை ரொடீசியாவில் குறைந்தது. புகையிலைக்கு ஆகக்குறைந்த விலை இவ்வளவு என்று அரசினர் அறிவித்து அந்த விலைக்குக் கிடைக்கும் புகையிலை அனைத்தையும் அரசு வாங்கிக்கொள்ளும் என்றும் அறிவித்தது.

1968ல் மெக்சிகோவில் நடைபெற்ற உலகஒலிம்பிக் பந்தயங்களில் ரொடீசியா கலந்துகொள்வதும், ஐ. நா. முடிவுக்குப்பின் தடை செய்யப்பட்டது.

# மலாவி

உலகம் பலவிதம். அதில் மலாவி ஒரு விதம் என்று சொல்லலாம்.

ஐந்து விரல்களும் அடுத்தடுத்து இருந்தாலும் அவைகளுள் ஒன்றுக்கொன்று எவ்வளவோ வேறுபாடு இருப்பதுபோல, ஆப்பிரிக்க நாடுகளுக்குள்ளும் வேறு பாடு நிலவுகிறது.

ஒவ்வொரு ஆப்பிரிக்க நாட்டிலும் ஆப்பிரிக்க ருக்குள் ஏராளமான இனத்தவர் இருக்கிறார்கள். ஓர் இனத்தவரும் பிறிதொரு இனத்தவரும் எலியும் பூனையுமாக இருப்பார்கள். பல இனத்தவர் வாழ்ந் தாலும் ஆப்பிரிக்கருக்குள் பூசல் இல்லாத நாடு, மலாவி.

கறுப்பர், வெள்ளையர் ஆகிய இரு பிரிவினரும் கீரியும் பாம்பும் போன்று நடந்து கொள்வதும் ஒரு வரை யொருவர் சந்தித்தால்கூட தீட்டு ஏற்பட்டு விடும் என்று நினைப்பதும் ஆப்பிரிக்கா வெங்கும் நடை முறையாக இருக்கிறது. இந்தப் போக்கு இல்லாத நாடு, மலாவி.

பொருளாதாரக்கொள்கைகள் மக்களின் தேவைக் கும் நாட்டின் நிலைக்கும் ஏற்ப அமைய வேண்டும். ஆனால் ஆப்பிரிக்க நாடுகள் அரசியல் சதுரங்க விளை யாட்டிலே அகப்பட்டுக் கொண்டு விடுகின்றன. அதற்கு மாறாக, நாட்டு மக்களின் நலங்கருதி, தென் ஆப்பிரிக்காவுடன் வணிக உறவு கொண்டுள்ள நாடு மலாவி.

இந்த நிலைக்குக் காரணமாக இருப்பவர் மலாவியின் தலைமை அமைச்சர் டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா.

**பண்டா**

பண்டாவுக்கு இப்போது வயது 70 இருக்கும். இவர் மணமாகாதவர். 12 வயதுச் சிறுவனாக இருந்தபோது, இவர் ஓராயிரம் மைல் நடந்து சென்று, தென் ஆப்பிரிக்காவில் ஒரு பள்ளிக்கூடத்தில் படித்தார். சாப்பாட்டுச் செலவுக்கும் படிப்புச் செலவுக்கும் கூலி வேலை பார்த்துப் பொருளீட்டிக் கொண்டார்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் கப்பல் செலவுக்கு மட்டும் பணம் திரட்டித் தென் ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்குப் பயணமானார். அங்கே, பல கல்லூரிகளில் பயின்றார். பின்னர், மருத்துவக் கல்வி பெற்று டாக்டரானார்.

டாக்டர் பண்டா, அமெரிக்காவிலிருந்து இங்லாந்துக்குப் போய் இலண்டன்மாநகரில் டாக்டராகத் தொழில் நடத்தினார். தொழிலில் நிறைந்த பணம் திரட்டினார். ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து இலண்டனுக்கு வந்த அனைவரும் பண்டாவின் நண்பராயினர். பண்டாவுடன் நெருங்கிப் பழகியவருள் ஒருவர் கானாவின் தலைவரான என்குருமா. என்குருமா கானாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், அவருடைய வேண்டுகோளுக்கிணங்க, டாக்டர் பண்டா கானாவில் மருத்துவத் தொழில் நடத்தினார்.

சில மாதங்களாயின. மாறிவரும் அரசியல் நிலை பண்டாவின் கவனத்தை ஈர்த்தது. மக்களின் உடல் நோய்களுக்கு மருத்துவம் செய்வதைக் கைவிட்டு,

ஆப்பிரிக்காவின் அரசியல் நோய்களைக் குணப்படுத்த அவர் முயன்றார்.

*1953* ஆம் ஆண்டு. அப்போதுதான் நியாசாலந்தை (மலாவி) வட ரொடீசியாவுடனும் தென் ரொடீசியாவுடனும் சேர்த்து நடு ஆப்பிரிக்கக் கூட்டாட்சியைப் பிரிட்டிஷ் அரசினர் அமைத்திருந்தனர். நியாசாலந்தில் தேசிய உணர்ச்சி அரும்பு விட்டுக் கொண்டிருந்தது.

நியாசாலந்தின் அரசியலில் டாக்டர் பண்டா முனைந்தார். என் குருமாவின் ஆதரவும் அவருக்கு இருந்தது. ஏழையாகத் தன் நாட்டை விட்டு நடந்து சென்ற பண்டா செல்வராகவும் டாக்டராகவும் 41 ஆண்டுகளுக்குப் பிறகு ஆகாய விமானத்தில் வந்து இறங்கினார், பொது வாழ்க்கையில் ஈடுபடுவதற்காக பண்டா தாயகம் திரும்பினார். அந்நிலையில், நியாசாலந்து மக்கள் அவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டனர். நடு ஆப்பிரிக்கக் கூட்டாட்சியை உடைப்பதும் நியாசாலந்தை சுதந்திர நாடாக்குவதும் தன்னுடைய நோக்கம் என்று அவர் அறிவித்தார்.

கூட்டரசில் வெள்ளையரின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கும் என்பதையும் ஆப்பிரிக்க மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பதையும் பண்டா சுட்டிக்காட்டினார். இடைவிடாது கிளர்ச்சிகள் செய்தார். அரசினர் பண்டாவைச் சிறையில் அடைத்தனர்.

*1963* ஆம் ஆண்டில் ஆப்பிரிக்கரின் கலகங்களின் விளைவாக, நடு ஆப்பிரிக்கக் கூட்டாட்சி கலைக்கப் பெற்றது. *1964* ஆம் ஆண்டில் நியாசாலந்து ஒரு தனி நாடாயிற்று. 73 ஆண்டுகள் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த இந்நாடு மலாவி என்ற பெயரில் பிரிட்டிஷ் காமன்வெல்த்தின் உறுப்பு நாடாயிற்று.

## அமைப்பு

மலாவி வடக்கேயிருந்து தெற்கே 520 மைல் நீள முடையது. ஆனால் இதன் அகலம் சில இடங்களில் 50 மைல் அளவாகவும் சில இடங்களில் 100 மைல் அள வாகவும் இருக்கிறது. ஏரிகளும் மலைகளும் மிகுந்து அழகான காட்சிகளை இந்த நாடு கொண்டிருக்கிறது. இந்த இயல்புகளில் இது கேரளத்தைப் போன்றிருக் கிறது. மேலும் சில ஒற்றுமைகள் இருக்கின்றன. மலாவியிலும் கிறித்தவ மிசினரிமார் பெருந் தொகை யாக உள்ளனர். மக்கள் வேலை தேடி, வெளி நாடு களுக்கு, ஜாம்பியாவின் தாமிரச் சுரங்கங்கள் ரொடீசி யாவின் புகையிலை நிறுவனங்கள் தென் ஆப்பிரிக்கத் தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கு மலாவியர்கள் செல் லுகிறார்கள்.

இந்த நாட்டின் பெரிய ஏரி நியாசா ஏரி என்பது. இதன் பெயராலேயே இந்நாடு வழங்கப் பெற்றது. இந்த ஏரியின் நீளம் 360 மைல். இந்த ஏரியின் பரப்பு, இந்த நாட்டின் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு. இது, தமிழ் நாட்டின் மிகப் பெரிய ஏரியான வீராணம் ஏரியைப் போல 60 மடங்கு பெரிது.

வடக்கே தங்கனிகா, கிழக்கே மொசாம்பிக்கே, தெற்கே தென் ரொடீசியாவும் மேற்கே வட ரொடீசி யாவும் இந்த நாட்டின் எல்லை நாடுகளாக உள்ளன.

## புவியியல் வளம்

இந்த நாட்டில் சிறு சிறு சுரங்கங்கள் உள்ளன. ஆனால் எந்தப் புவியியல் பொருளும் உற்பத்தி செய்யப்படவில்லை,

**வளம்**

மலாவியின் பெரிய உற்பத்திப் பொருள் தேயிலை. ஆண்டுதோறும் 16,000 டன் தேயிலை உற்பத்தியாகிறது. (இந்தியாவில் தேயிலை உற்பத்தி மூன்றரை லட்சம் டன்)

**நகரங்கள்**

அரசு அலுவல்களுக்கு ஒரு தலைநகரமும் வணிகத்துக்கு ஒரு பெரு நகரமும் உள்ளன.

மலாவியின் பெரிய ஆறு சிரே. இது ஜம்பேசியின் துணை ஆறு. காவேரி ஆற்றின் கரையில் திருச்சியும் திருவரங்கமும் அமைந்திருப்பதுபோல, சிரே ஆற்றின் கரையில் பிளான்டயரும் லிம்பேயும் இருக்கின்றன.

இந்த இரட்டை நகரம் வெளிநாட்டு விமானங்கள் சந்திக்கும் இடமாகவும் இரயில் போக்குவரத்தின் தலைமை இடமாகவும் விளங்குகிறது. மக்கள் தொகை ஒரு லட்சம். புகையிலை ஏலம் இங்கு நடைபெறுகிறது. சிமிண்டு ஆலையும் மரவேலைத் தொழிற் சாலைகளும் இங்குள்ளன.

மலாவியின் இப்போதைய தலைநகரம் சோம்பா.

ஆனால் புதிய தலைநகரம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. மலாவியின் உணவுக் களஞ்சியமாயும் தொன்மை நாகரிகத்தின் இருப்பிடமாயும் மராபி என்னும் பகுதி உள்நாட்டில் இருக்கிறது. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தாலும் பிறதுறைகளில் இப்பகுதி முன்னேற்றமடையவில்லை. ஆகையால் இப் பகுதியில் தலைநகர் உண்டாக்கப்படுகிறது. புதிய தலைநகரின் பெயர் லிலோன்வி.

நாட்டின் புதிய நகரை உருவாக்கத் தென் ஆப்பிரிக்க அரசு இரண்டு கோடி ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறது, ஏன் இந்தத் தொகையை ஏற்றுக் கொண்டீர்கள் என்று பண்டாவைக் கேட்டால் அவர் கேட்கும் எதிர்க் கேள்வி நாய் விற்ற காசு குலைக்குமா? என்பதாகும்.

லிலோன்விக்குத் தலைநகரை மாற்றிய பிறகு பழைய தலைநகரான சோம்பாவை ஒரு பல்கலைக் கழக நகரமாக ஆக்கி விடுவதென்று பண்டா முடிவு செய்திருக்கிறார். மலாவிப் பல்கலைக் கழகம் 1965ல் நிறுவப் பெற்றிருக்கிறது.

## தேசிய மயமும் நாட்டின் தேவையும்

தொழில்களைத் தேசியமயமாக்குவதை டாக்டர் பண்டா சிறிதும் விரும்பவில்லை. சர்க்கரை உற்பத்தி, மலாவியின் தேவையைவிடக் கூடுதலாகியிருக்கிறது. தேயிலை உற்பத்தி 17,500 டன் அளவாகப் பெருகி விட்டது. மணிலாக்கடலை உற்பத்தியும் கூடியவண்ணமாக உளது. ஏனைய ஆப்பிரிக்க நாடுகளான கானு, உகண்டா ஆகியவற்றில் உற்பத்திப் பெருக்கமோ, தொழில் வளர்ச்சியோ இந்த அளவு இல்லை.

தென் ஆப்பிரிக்கா இராணுவ வல்லமையுள்ள நாடு. கல்லுடன் மோதிக்கொள்வது அறிவுடைமை யாகாது. இரகசியமாக வாணிகம் நடத்துவதைவிட பலரறியத் தென் ஆப்பிரிக்காவுக்குப் பொருள்களை விற்பதையும், வாங்குவதையுமே அவர் விரும்புகிறார், 'அரசியல், மேடைப்பேச்சுக்கு ஏற்றது. வணிக உறவு, வயிறு வளர்க்கத் தேவையானது' என்பது பண்டாவின் முடிந்த முடிபு.

**பல்சுவை**

**மலாவியில் இருப்பவை:** டெஸ்டிப் பூச்சி.

**இல்லாதவை:** துறைமுகம், கனிச்செல்வம்.

**தேசியக் கொடி:** கறுப்பு, சிவப்பு, பச்சை நிறங்களால் ஆகியது.

**1962ல் பெரிய நிகழ்ச்சி:** கோவாவை சுதந்திர இந்திய அரசினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து, போர்த்துக்கீசிய ஆட்சியிலுள்ள மொசாம்பிக்கேயில் வாழும்சில ஆயிரம் இந்தியர் கைது செய்யப்பட்டனர். பிறகு அவர்கள் அந் நாட்டினின்றும் வெளியேறி, மலாவியில் குடியேறினர்.

**1968ல் பெரிய நிகழ்ச்சி:** இந்தியாவுடன் நேரடியான தொலைபேசி இணைப்பு ஏற்பட்டிருப்பதே.

**மலாவி மக்களின் முழக்கம்:** உஃபுலி.

உஃபுலி! ஜெய் ஹிந்த்!

# போர்த்துக்கீசிய ஆட்சியிலுள்ள ஆப்பிரிக்க நாடுகள்

ஆப்பிரிக்காவின் தென் கோடியைக் கண்ட கடற் படை வீரர்களில் வாஸ்கோடகாமா முதலிய வீரர்கள் முன்னணியில் இருந்தனர் இதனுல் போர்ச்சுக்கல் நாடு, 15-ம் நூற்ருண்டு முதல் ஆப்பிரிக்காவின் தென் பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருந்தது.

19-ம் நூற்ருண்டு வரை போர்த்துக்கீசியர் செல் வாக்கு, கடலோரப் பகுதிகளில் மட்டுமே இருந்தது. பின்னரே உள்நாட்டிலும் இவர்களுடைய செல்வாக் குப் பரவியது.

போர்த்துக்கீசியர் ஆட்சியிலடங்கிய ஆப்பிரிக்கப் பகுதிகள் அங்கோலாவும் மொசாம்பிக்கேயும். இவ் விரண்டையும் தனித்தனியே விவரிக்குமுன் இவற்றின் பொது இயல்புகளேக் கூறுவோம்.

போர்ச்சுக்கல், ஐரோப்பாவில் இருந்தபோதிலும், பிற நாடுகளேவிடச் செல்வாக்கும் செல்வமும் குறைந்த நாடு. ஐரோப்பாவின் ஒரு மூலேயில் இருப்பதால், அப்பெரு நிலப்பரப்பில் ஏற்பட்ட மாறுதல்களால், புரட்சிகளால், முன்னேற்றங்களால் பாதிக்கப்படாத நாடு. எனவே தொழில் வளர்ச்சியில் இந்த நாடு முன்னின்று விளங்கவில்லே.

அங்கோலாவிலும் மொசாம்பிக்கேயிலும் உரம், செட்புச் சுரங்கம், கப்பல் கட்டுவது, மீன் பிடிப்பது— இத்தொழில்களில் மட்டுமே போர்த்துக்கீசியர் ஈடுபட்

டனர். பிற தொழில்களெல்லாம் ஏனைய ஐரோப்பிய நாட்டினரிடமும் அமெரிக்கரிடமும் விடப்பட்டன. இரயில், தொலைபேசி போன்ற நிறுவனங்கள் ஆங்கிலேயராலேயே நடத்தப்பட்டன. செப்புத் தவிர பிற சுரங்கங்கள் பெல்ஜிய நாட்டினரால் இயக்கப்பெற்றன. ஆப்பிரிக்காவில் சில பகுதிகள் பிரிட்டிஷாரிடம் இவர்கள் பரிமாறிக்கொண்டு பெற்றவையே. பம்பாய் நகர்ப்பகுதி போர்த்துக்கீசியரிடம் இருந்ததும் ஆங்கிலேய அரசன் ஒருவனை மணந்த போர்த்துக்கீசிய இளவரசிக்குச் சீர் வரிசையாக அந்நகரம் வழங்கப் பெற்றதும் வரலாற்று நிகழ்ச்சிகளாகும்.

பிற நாட்டவரைப் போலன்றித் தாங்கள், ஆப்பிரிக்க மக்களுடன் நெருங்கிப் பழகியிருப்பதைப்பற்றிப் போர்த்துக்கீசியர் பெருமைப்படுகின்றனர். 19-ம் நூற்றுண்டுக்கு முன், ஆடவர் மட்டுமே போர்சுக்கல்லிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு வந்தனர். அவர்கள் ஆப்பிரிக்கப் பெண்களுடன் உறவு கொண்டனர். இக்கலப்பால் 'முலாட்டோ' என்ற இனம் தோன்றிற்று. இதைப் பற்றி அவர்கள் கூறுவதாவது:

**கடவுள் வெள்ளையரைப் படைத்தார்.**
**கடவுள் கறுப்பரைப் படைத்தார்.**
**போர்த்துக்கீசியர் முலாட்டோவைப் படைத்தனர்.**

இதை மறுத்து, ஆப்பிரிக்கர் பின் வருமாறு சொல்லுகிருர்கள்.

**கடவுள் ஆப்பிரிக்கரைப் படைத்தார்**
**கடவுள் முலாட்டோவைப் படைத்தார்**
**ஆனுல் பிசாசு போர்த்துக்கீசியரைப் படைத்தது.**

போர்த்துக்கீசியர், பிற ஐரோப்பிய நாட்டினரை விட, ஆப்பிரிக்காவில் உரிமை கொண்டாடுகின்றனர்.

இக்கூற்றுக்கு ஆதாரமாக அவர்கள் சொல்லுவது என்ன என்பதைக் காண்போம். 'அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டு பிடிக்கு முன்னரே நாங்கள் ஆப்பிரிக்காவுக்குப் போய்விட்டோம். அமெரிக்காவில் குடியேறியவரெல்லாம் அமெரிக்கராக இருக்கும் போது, நாங்களும் அவ்வாறே ஆப்பிரிக்கர் என உரிமை கேட்பதில் தவறில்லை' என்பது அவர்களின் விடாப்பிடியான வாதம்!

தாங்கள் ஆப்பிரிக்கர்களுக்குச் சம உரிமைகள் வழங்கியிருப்பதாகவும் போர்த்துக்கீசியர் பெருமைப் பட்டுக் கொள்ளுகின்றனர். பள்ளிகளில் கறுப்புக் குழந்தைகளையும் சேர்த்துக் கொள்ளுகிறார்களாம். மெய்தான், 800 வெள்ளைக் குழந்தைகளுடன் 10 கறுப் புக் குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டுவிடுவர். அது ஊருக்கு ஒப்புக்குச் செய்வதேயன்றி, கொள்கை மாற் றம் அன்று.

இரயில் பயணம் செய்ய ஆப்பிரிக்கர்க்கும் உரிமை கொடுத்திருக்கிறார்கள். ஆயினும் அங்கோலாவிலோ மொசாம்பிக்கேயிலோ ஆப்பிரிக்கரை இரயிலில் காணு வது அருமை. காரணம், ஆப்பிரிக்கரின் சம்பளம்—அதே வேலைக்கு—போர்த்துக்கீசியர் பெறும் சம்பளத் தில் நான்கில் ஒரு பங்கு. எனவே, இரயில் கட்டணம் செலுத்தும் அளவுக்கு ஆப்பிரிக்கரிடம் பணம் கிடை யாது.

ஆப்பிரிக்கருக்கும் வாக்குரிமை வழங்கப் பெற் றிருக்கிறது. எல்லா ஆப்பிரிக்கருக்கும் அன்று.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

அவர்களுள்ளும் போர்த்துக்கீய மொழியைத்தெளி வாகவும் செம்மையாகவும் பேசத் தெரிந்தவர்கள்.

மேலும், சொந்தமாகத் தொழில் நடத்துபவராக இருக்க வேண்டும்.

நல்ல நடத்தை உள்ளவர்களாக இருப்பதும் இன்றியமையாத் தகுதியாகும்.

போர்ப் படையில் சேர வேண்டுமென்று அரசினர் கேட்டால், தடை சொல்லாது உடனே சேர்ந்துவிட வேண்டும்.

வழி வழி முறைகளையும் பழக்கங்களையும் கைவிட்டவர்களாக இருக்க வேண்டும்!

இந்த தகுதிகளுள்ள ஆப்பிரிக்கர், நிறம் கறுப்பாக இருந்தாலும், தங்கு தடையின்றி போர்த்துக்கீசியர் குடியுரிமை பெறலாம்

# அங்கோலா

ஆசை யாரை விட்டது? தளபதியாகவே இருந்து பழகிவிட்டேன். ஆணைகள் பிறப்பிப்பதே என் இயல்பு அவற்றைப் பிறர் நிறைவேற்றுவதைக் காண்பதே என் அன்றாட வாழ்க்கை. பதவியை விட்டுக்கொடுக்க என் மனம் இடம் தரவில்லையே?

—நெப்போலியன்.

அட்லாண்டிக் கடற்கரையோரத்தில் இருக்கிறது அங்கோலா. வடக்கே கபான், வடமேற்கே காங்கோ, மேற்கே ஜாம்பியா, தெற்கே தென்மேற்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. அங்கோலாவின் ஒரு சிறு பகுதி, காங்கோ நாட்டுச்குள் இருக்கிறது

போர்த்துக்கீசியர் 1890-ல் அங்கோலாவைப் பிடித்துக்கொண்டனர். 1913 முதல் இங்கு முறையான ஆட்சி செலுத்துகின்றனர், போர்த்துக்கல்லின் பகுதியாக லிஸ்பனிலிருந்து ஆளப்படும் அங்கோலா, 13 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாநிலமும் பல **'கான்செல்ஹோ'** (மாவட்டம்) ஆகவும், கான்செல் ஹோக்கள் **சர்கம் செஸ்கோ** (வட்டம்)க்களாகவும், அவற்றின் உட்பிரிவுகளாக ஒவ்வொரு நாலாயிரம் மக்கள் வாழும் வட்டாரமும் ஒரு **செ:.பி சொ** போர்ட்டாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சிற்றூரிலும் ஒரு போர்த்துக்கீசியன் கடை வைத்திருப்பான். அந்தக் கடைக்காரன் வியாபாரி மட்டும் அல்லன்; போர்த்துக்கீசிய அரசின் கண்களாகவும் காதுகளாகவும் அவன் விளங்கி வருகிறான்.

## இருவகை நீதி

போர்த்துக்கீசிய நாட்டுச் சட்டப்படி போர்த்துக்கீசியர்கள் நடத்தப்படுகிறார்கள். ஆப்பிரிக்க மக்கள் சில சமயங்களில் நாட்டு வழக்கப்படியும் பிற சமயங்களில் போர்த்துக்கீசியச் சட்டப்படியும் ஆளப்படுகிறார்கள்.

400 ஆண்டுகளாக இங்கு மக்களைப் பிடித்து அடிமை வியாபாரத்திற்கு பிரசில் நாட்டுக்கு அனுப்புவதே போர்த்துக்கீசியரின் பெரிய தொழிலாக இருந்து வந்திருக்கிறது. போர்த்துக்கீசிய ஆப்பிரிக்கரைக் கட்டாயப்படுத்தி ஆண்டுக்கு ஆறு மாதம் வேலை வாங்கும் பழக்கத்தையும், அவர்களைப் பிரம்பால் அடிக்கும் முறையையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். கல்வி நிலையும் சுகாதார நிலையும் கேவலத்திலும் கேவலமாக இருந்து வந்திருக்கின்றன. போக்குவரத்து வசதிகளிலும் முன்னேற்றம் கிடையாது. ஆகையால் அயலவர் ஆட்சி என்ற பொதுக்கருத்து ஆங்கிலேய ஆட்சி, பிரெஞ்சு ஆட்சிகளைப்பற்றி நிலவுவதற்கும் போர்த்துக்கீசிய ஆட்சி முறைக்கும் எந்த வகையிலும் ஒற்றுமை கிடையாது.

போலீசு வேலைக்கும் வேளாண்மைத் தொழிலுக்கும் போர்ச்சுகல் நாட்டிலிருந்து கைதிகளும் குற்றவாளிகளும் கீழ்த்தரமான மக்களும் வரவழைக்கப்பட்டனர். எழுத்தர், பணிப்பெண்கள், வாடகைக்கார் இயக்குபவர், தச்சர்—அனைவரும் போர்த்துக்கீசியரே. இதனால் மனம் நொந்த ஆப்பிரிக்கர் அங்கோலாவை விட்டு வெளியேறி ரொடீசியாவுக்கும் ஜாம்பியாவுக்கும் அகதிகளாகச் சென்றனர்.

## நாட்டு உணர்ச்சியும் புரட்சியும்

தேசிய உணர்ச்சி 1920-லேயே பரவிவிட்டது. வெள்ளேயர் அனைவரையும் கொல்லுவதற்கும் திட்டமிட்டிருந்தனர். அம் முயற்சி பலன் தரவில்லை. கோவாவை, இந்தியா போர்ச்சுகல் ஆட்சியிலிருந்து விடுவித்தபோது, அங்கோலா மக்கள் மீண்டும் கிளர்ச்சி செய்தனர். 1961-ல் ஏற்பட்டது வெறும் கிளர்ச்சியன்று; உள்நாட்டுப் போரே எனலாம். ஆப்பிரிக்கர் காப்பித் தோட்டங்களை அழித்தனர்; போர்த்துக்கீசியரை வெட்டி வீழ்த்தினர். போர்த்துக்கீசிய அரசு கலகக்காரர்களை முழு மூச்சுடன் எதிர்த்தது. விமான நிலையங்களை அமைத்தது. ஜெட் விமானங்களிலிருந்து குண்டு வீசிற்று. மலைநாட்டிலிருந்த ஆப்பிரிக்கரை அடியோடு அப்புறப்படுத்திற்று அவர்களின் அடிச்சுவடே, வளமான பகுதிகளில் காண இயலாதவாறு கலகக்காரர்களை அடக்கி ஒடுக்கிற்று. 40000 பேர் கொல்லப்பட்டனர். 60,000 பேர் நாடு கடத்தப்பட்டனர். இந்த வகைகளில் 40 கோடி ரூபாய் செலவு செய்ததால், போர்ச்சுக்கலின் பொருளாதாரம் சீர் குலைந்தது.

அங்கோலாவுக்கும் மொசாம்பிக்கேக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்பதை 1960 முதல் ஐக்கிய நாடுகள் அவை வற்புறுத்தியும் வலியுறுத்தியும் வருகிறது. மக்களாட்சி முறைக்கு ஏற்ப, பல முன்னேற்றங்கள் நடைபெறுவதாக ஆண்டுதோறும் போர்ச்சுக்கல், ஐ. நா. வுக்கு அறிக்கைகள் அனுப்பி நாட்களைக் கழித்து வருகிறது.

இந் நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள வளமற்ற சின்னஞ்சிறு பகுதிகள் தங்களை விடுவித்துக் கொண்டுள்ளன.

**பல்சுவை**

**தலைநகர்:** லுவாண்டோ.

இங்கு, போர்த்துக்கீசியர் குடியேற்றம் அயராது நடைபெறுகிறது. இதனால் மாதம் 1,000 ரூபாய் வாடகை கொடுத்தால்தான், ஒரு சிறு வீடாவது கிடைக்கும்.

இந்நகரில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டலாம் என்பது போர்த்துக்கீசியரின் நம்பிக்கை.

**ஆறுகள்:** காவுங்கோ, கசாய், மேல்ஜம்பேசி.

**மலை:** 3,000 முதல் 4,000 அடி வரையுள்ள வளமான மலைநாடு.

**மழை:** சில இடங்களில் ஆண்டுக்கு 15 அங்குலம்.

**விளைபொருள்கள்:** ஆளிவிதை, ஆப்பிரிக்கர் உண்ணச் சோளமும், அவலும்; சர்க்கரைவள்ளி, இலவம்பஞ்சு.

**தொழில்கள்:** பிரெஞ்சுக்காரர் நடத்தும் அலுமினியத் தொழிற்சாலை,

**புவியியல்:** தங்கம், செப்பு, வயிரம்.

**இறக்குமதி:** ஆப்பிரிக்கரைச் சாகடிக்கத் துப்பாக்கிகளும் நச்சுக்காற்றைப் பரப்பும் குண்டுகளும்.

**ஏற்றுமதிப் பொருள்கள்:** சோளம், மீன், சர்க்கரை, காப்பி.

**இருப்பவர்கள்:** உலகிலேயே குறைந்த சம்பளத்துக்கு வேலை பார்க்கும் சுரங்கத் தொழிலாளர்.

# மொசாம்பிக்கே

மொசாம்பிக்கே, அங்கோலாவைப் போலப் போர்த்துக்கீசிய ஆட்சியிலிருக்கிறது. ஆனால் இவை அடுத்தடுத்து இல்லை. இவற்றுக்கு ஊடே, பிரிட்டிஷ் ஆட்சியிலிருக்கிற சிறு நாடுகள் உள்ளன.

**கிழக்கும் மேற்கும்**

அங்கோலா, ஆப்பிரிக்காவின் கிழக்குக் கோடியில் அட்லாண்டிக் கரையில் இருக்கிறது. மொசாம்பிக்கே ஆப்பிரிக்காவின் மேற்குக் கோடியில் இந்தியப் பெருங் கடலோரமாக உள்ளது. 1600 மைல் நீளத்திற்கு கடற் கரையுடையது. அங்கோலா, பரப்பில் பெரியது: மொசாம்பிக்கே மக்கள் தொகையில் பெரியது. இங்கு ஆப்பிரிக்கர் 60 லட்சம்; அங்கேலாவில் ஆப்பிரிக்கர் 40 லட்சம் பேருளர். மொசாம்பிக்கேயில் 1970-க்குள் போர்த்துக்கீசியர் தொகை 10 லட்சமாக ஆகிவிடும். மொசாம்பிக்கேக்கு வடக்கே ஜாம்பியா, மலாவி, தங்கனிகா நாடுகளும் தெற்கே தென் ஆப்பிரிக்காவும் மேற்கே ரொடீசியாவும் உள்ளன.

மொசாம்பிக்கேயை நம்பித்தான் ரொடீசியாவும், ஓரளவு தென் ஆப்பிரிக்காவும் வாழுகின்றன. ரொடீசியா உள்நாட்டு நாடு; மொசாம்பிக்கேயிலுள்ள பெரியா துறைமுகமே ரொடீசியா, மலாவி, ஜாம்பியா நாடுகளுக்கு ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் பயன்படுகிறது. தென் ஆப்பிரிக்க மாநிலமான நெட்டாலுக்கு மொசாம்பிக்கேயிலுள்ள லாரன்சோ மார்க்குவெஸ் துறைமுகம்தான் அருகே அமைந்திருக்கிறது.

ரொடீசியாவிலும் தென் ஆப்பிரிக்காவிலும் வேலை பார்ப்பதற்குக் கூலியாட்கள் அனுப்பி ஆளுக்கு இவ்வளவு என்று 'தலைவரி' விதித்து, மொசாம்பிக்கே அரசு வருவாய் பெறுகிறது.

**எதிர் காலம்**

பெட்ரோலும் எரிபொருளாகப் பயன்படக்கூடிய வாயுப் பொருளும் 14,000 சதுரமைல் பரப்பிலுள்ளன. இவற்றை எடுக்கும் உரிமை பிரெஞ்சு, தென் ஆப்பிரிக்க, அமெரிக்க நிறுவனத்துக்கு 1968-ல் வழங்கப் பெற்றிருக்கிறது. இத்தகைய உரிமையை ஒரு பெரிய அமெரிக்கக் குழு, நாட்டின் பெரும்பகுதியில் பெற்றிருக்கிறது. இந்த முயற்சிகளின் விளைவாக பொருளாதாரத்துறையில் மொசாம்பிக்கேயின் நிலை பெரிதும் ஏற்றம் பெறலாம்.

**வெளிநாட்டாரின் செல்வாக்கு**

எல்லாத் தொழில்களும் வெளிநாட்டாரிடம் (போர்த்துக்கீசியர் அல்லாதாரிடம்) உள்ளன. போர்த்துக்கல்லில் பணம் முதலீடு செய்பவரோ தொழில் நுட்ப அறிஞரோ இல்லை. கொப்பரைத் தோட்டங்கள் பல நாட்டினர் பங்கு பெற்றுள்ள நிறுவனங்களிடமும் பிற தோட்டத் தொழில்கள் ஆங்கிலேயரிடமும், தென்னைத் தோப்புக்கள் ஜெர்மானியரிடமும் சர்க்கரை ஆலைகள் பிரெஞ்சுக்காரரிடமும் பிரிட்டிஷாரிடமும், முந்திரிக்கொட்டையைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகள் பிரிட்டிஷாரிடமும், சிமிண்டு ஆலை தென் ஆப்பிரிக்கரிடமும் உள்ளன. பெல்ஜியம் டென்மார்க்கு ஆகிய நாடுகளும் பல தொழில்களை நடத்தி வருகின்றன. இவையெல்லாம் கொசுக்கள். ஏற்கெனவே நாம் குறிப்பிட்டுள்ளபடி எண்ணெய், வாயு எடுக்கும் உரிமைகளுள்ள பெரிய நிறுவனங்களை

அமெரிக்கர் தொடங்கியுள்ளனர். ஆப்பிரிக்கர் ஆட்சி மொசாம்பிக்கேயில் ஏற்பட, போர்த்துக்கீசியர் சம்மதித்தாலும் இத்தனை நாட்டாரும் விடுவார்களா? சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடான்.

அரசியல் கிளர்ச்சி ஏற்பட்டால் உற்பத்தி பாதிக்கப்படும். முதலீட்டுக்கும் ஆபத்து உண்டாகும். இதையுணர்ந்து, இந்த நாட்டில் ஆப்பிரிக்கருக்கு நிலங்கள் வழங்கப்படுகின்றன. இரகசியப் போலீசார் ஆப்பிரிக்க மக்களைக் கண்காணித்த வண்ணமாக உள்ளனர். தங்கனிகாவில் வாழும் மொசாம்பிக்கேயரால் சுதந்திர இயக்கம் இந்த நாட்டில் பரவிவிடுமோ என்ற அச்சம் வெள்ளைக்காரர் அனைவர்க்கும் இருந்து வருகிறது.

தலைநகர் லாரன்சோ மார்க்குவேஸ். இது 8,000 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது. முந்திரி வியாபாரத்தில் உலகிலேயே இந்த நகரம்தான் உயர் நிலையில் இருக்கிறது.

இந்த மாவட்டத்தில்தான் போர்த்துக்கீசியர் பெருந்திரளாக உள்ளனர். புதிதாக வருபவர்களும் இங்கேயே குடியேற வாய்ப்பும் வசதியும் செய்து கொடுக்கப்படுகிறது.

## இந்தியர்

குஜரத், கச்சுப்பகுதிகளிலிருந்து வணிகராக வந்த இந்தியர்களும், கோவாவிலிருந்து அரசாங்க வேலை பார்க்க வந்த இந்தியர்களும் 100 ஆண்டுகளாக இங்கு உள்ளனர்.

கோவாவை இந்தியா விடுவித்தது முதல், இவர்கள் சொல்லொணாத் துயரத்துக்கு ஆளாகியுள்ளனர். சிறையில் வைத்தும் சொத்துக்களைப்பறிமுதல் செய்தும்

போர்த்துக்கீசியர், இவர்களுக்கு இன்னல் விளைத்துள்ளனர்.

பல ஆண்டுகளாக போர்ச்சுகல்லுக்கும் இந்தியாவுக்கும் அரசியல் உறவு ஒன்றுமே இல்லை. இதனால் இப்போது இந்நாட்டில் வாழும் இந்தியர் பற்றிச் சரியான விவரங்கள் தெரியவில்லை. சிலர் அண்டை நாடுகளில் குடியேறிவிட்டனர்.

**பல்சுவை**

**ஆட்சி மொழி;** போர்த்துக்கீசிய மொழி

**வழங்கும் பிற மொழிகள்:** பல்வேறு பாண்டு மொழிகள்.

**இருப்பவை:** ரிக்ஷா வண்டி, ஒரு சணல் ஆலை, அலுமினியம் சிமெண்டு மாவு தாவர எண்ணெய் காகிதத் தொழிற்சாலைகள்; கடலோரப் பகுதிகளில் நீர்யானைகளும் முதலைகளும்; போர்த்துக்கீசியர் கட்டிடக் கலையின் சின்னமாக உள்ள தேவாலயங்கள், அராபியப் பண்பாட்டின் அடிச்சுவடுகள்.

**விளைபொருள்கள்:** பருத்தி, இலவம்பஞ்சு, முந்திரி, மணிலாக்கடலை, நெய், சர்க்கரை, மொச்சை, சோளம், தேயிலை, கொப்பரை, வாதாங்கொட்டை.

**சுரங்கங்கள்:** நிலக்கரி.

**பயன்பட வாய்ப்பு உள்ள சுரங்கப் பொள்ருகள்:** தங்கம், தாமிரம், தகரம், ஈயம், குரோமியம், பாக்சைட்.

**போர்த்துக்கீசியரின் பொழுதுபோக்கு:** இரு குழுக்களாகத் தங்களை அமைத்துக்கொண்டு மஞ்சுவிரட்டு (ஜல்லிக்கட்டு) போன்று காளைகளின் கொம்பைப் பிடிக்கப் பந்தயம் நடத்துவது.

**இங்கு வாழும் உயிரினங்கள்:** யானைகள், காண்டா மிருகங்கள், சிங்கங்கள், சிறுத்தைகள்.

இவற்றுக்கு அஞ்சுவதைவிட, போர்த்துக்கீசியரின் கொடுங்கோன்மைக்குத்தான் மக்கள் அஞ்சுகின்றனர்.

---

## வரலாற்றுக் குறிப்புகள்

| கி. மு. | |
|---|---|
| *5,00,000* | ஆப்பிரிக்காவில் மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கு அறிகுறிகள் உள்ளன. |
| *1,00,000* | தொடக்க கற்காலம்—அளவு கடந்த மழை—கல்லில் கருவிகள் செய்தனர். மக்கள் தீ மூட்டக் கற்றுக் கொண்டனர். |
| *50,000* | அளவு கடந்த மழைக்காலம். நடுக் கற்காலம். |
| *10,000* | ஆசியாவிலிருந்து மக்கள் (இன்றைய நீக்ரோக்கள்) வந்தனர், |
| *6,000* | மலைகளில் ஓவியங்கள் எழுதப் பெற்றன. |
| *4,000* | பிந்திய கற்காலம். |
| *600* | இரும்பைப் பயன்படுத்திக்கொள்ள இங்குள்ள மக்கள் தெரிந்து கொண்டனர். தென்னை பயிரிடும் முறையை இந்தியர் இங்கே பரப்பினர். |

கி. பி. 11ஆம் நூற்றூண்டு பொன் ஆபரணங்கள் செய்யும் கலை பரவிற்று.

1514 ஓர் ஐரோப்பியர் முதல் தடவையாக நடு ஆப்பிரிக்காவுக்கு வந்தார். போர்த்துக்கீசியர் குடியேற்றமும் கிறித்தவ சமயப் பிரசாரமும் தொடங்கின.

1569 போர்த்துக்கீசியர் தங்களுடைய கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிக்கு ஒரு கவர்னரை நியமித்தனர்.

உள்நாட்டுப் பகுதிகளை ஆராயவும் தங்கம் இருப்பதைக் கண்டுபிடிக்கவும் ஐரோப்பியர் பெரு முயற்சி செய்தனர். பலர் இம்முயற்சியில் இறந்தனர்; சிலர் செல்வராயினர்.

1855 டேவிட் லிவிங்ஸ்டன், விக்டோரியா அருவியைக் கண்டுபிடித்தார்.

1890 பிரிட்டிஷ் தென் ஆப்பிரிக்கக் கம்பெனி ஏற்பட்டது.

1895 பல பகுதிகளில் இரயில்பாதை போடப் பட்டது.

1902 செசில் ரோட்ஸ் காலமானார்.

,, செப்புச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப் பட்டன.

1923 பிரிட்டிஷ் தென்ஆப்பிரிக்க வணிகக் குழுவிலிருந்து ஆட்சிப் பொறுப்பைப் பிரிட்டிஷ் அரசு ஏற்று, குடியேற்ற நாடாக வட ரொடீசியாவை அறிவித்தது. தென் ரொடீசியா, நியாசாலந்து

நாடுகளுடன் நெருங்கிய ஒத்துழைப்புக்கு வகை செய்தனர்.

*1931* பொருளாதார மந்தம். தென் ரொடீசியாவின் நிலை குறைந்தது.

*1953* நடு ஆப்பிரிக்கக் கூட்டாட்சி ஏற்பட்டது.

*1958—1960* சாலிஸ்பரியிலும் மலாவியிலும். கலகங்கள். ஹேஸ்டிங்ஸ் பண்டாவின் கிளர்ச்சி.

*1963* கூட்டாட்சியினின்றும் பிரிந்து வட ரொடீசியாவும் தென் ரொடிசியாவும் தனிநாடுகளாயின.

*1964* மலாவி சுதந்திர நாடாயிற்று.

*1965* ரொடீசியா, ஒருதலைப் பட்சமாகத் தன்னைச் சுதந்திர நாடாக அறிவித்தது. பிரிட்டிஷ் காமன்வெல்த்நாடுகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

*1966* பல நாடுகள் ரொடீசியாவுடன் பொருளாதார உறவை நிறுத்திக் கொண்டன.

*1967* போர்த்துக்கீசிய ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து மக்கள் அகதிகளாக வெளியேறினர்.

*1968* தென் ஆப்பிரிக்காவும் ரொடீசியாவும் உலகை மிரட்டின. மீண்டும் அந்த நாடுகளை ஐ. நா. அவை கண்டித்தது. இந்நூல் அச்சாகும்போது, ரொடீசியாவும் பிரிட்டனும் ஓர் உடன்பாட்டுக்கு வரக் கூடுமென்று அறிகுறிகள் காணப்படுகின்றன.

---